## வடக்கு கிழக்கு உள்ளூராட்சி சேவைகள் முன்னேற்றச் செயற்திட்டம் (என்ஈஎல்எஸ்ஜபீ) -2013

வடக்கு கிழக்கு உள்ளூராட்சி சேவைகள் முன்னேற்றச் செயற்திட்டத்தின் (என்ஈஎல்எஸ்ஜபி) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்குமிடையில் (ஐடிஏ) கைச்சாத்திடப்பட்ட 2009 நெவம்பர் 08 ஆம் திகதிய 4728-எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் 2 ஆம் பட்டோலையின் II பீ பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் நிதியளிப்பு உடன்படிக்கையின்படி, பொருளாதார அபிவிருத்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கும் முகவராக உள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளின் உள்ளூராட்சி ஆணையாளர்கள் மாகாண மட்டத்தில் செயற்திட்ட நடவடிக்கைகளின் முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்பிற்குப் பொறுப்பாளிகளாவர். பதிலளிக்கும் மற்றும் கணக்குப் பொறுப்புக் கூறும் விதத்தில் சேவைகள் மற்றும் உள்ளூர் கட்டமைப்புக்களை விநியோகிப்பதற்காக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு ஆதரவு வழங்குதல் செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின்படி, செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ஐ.அ.டொலர் 86 மில்லினானதுடன் அதில் ஐ.அ.டொலர் 50 மில்லியன் அல்லது 58 சதவீதம் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் நிதியளிக்கப்பட உடன்பாடு காணப்பட்டது. ஐ.அ.டொலர் 34 மில்லியன் தொகையான மிகுதிக்கிரயம் இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட வேண்டியதுடன் ஐ.அ.டொலர் 2 மில்லியனான மீதிப்பகுதி செயற்திட்டத்தின் நலனாளிகளால் பங்களிப்புச் செய்யப்பட வேண்டும். செயற்திட்டம் தனது நடவடிக்கைகளை 2010 மே 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2015 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

### 1.3 செயற்திட்டத்தின் நடவடிக்கைகள்

உடன்படிக்கையின்படி, இந்தச் செயற்திட்டம் ஆக்கக் கூறுகள் 1, 2, 3, 4, மற்றும் 5 ஆகிய பிரதான ஐந்து ஆக்கக் கூறுகளைக் கொண்டதாகும். செயற்திட்டத்தின் இந்த ஐந்து ஆக்கக் கூறுகள் தொடர்பான நடவடிக்கைகள் கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

**ஆக்கக்கூறு 1 - உட்கட்டமைப்புச் சேவை, விநியோகம்**

உள்ளூராட்சி சபைகளிற்கு அவை உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இயலக்கூடியதாக மானியங்கள் வழங்குதல்.

**ஆக்கககூறு 2 -** **நிறுவனமயப்படுத்தும் கணக்குப் பொறுப்பு**

உள்ளூராட்சிச் சபைகளிற்கு, அவைகள் தமது ஆண்டு நிதிக் கணக்காய்வு, சமூக மற்றும் தொழில் நுட்பக் கணக்காய்வு என்பவற்றை வெளிப்படையாகவும் சுதந்திரமாகவும் மேற்கொள்ளவும் நிலுவையாக உள்ள நிதிக் கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வு வினாக்களை கையாளவும் இயலக் கூடியதாக தொழில் நுட்ப உதவி வழங்குதல். உள்ளூராட்சிச் சபைகளின் செயற்பாட்டை விரிவுபடுத்துவதற்கான கல்வி மற்றும் தொடர்பாடல் பிரசாரம் மற்றும் முறைமைகள் மற்றும் செயன்முறைகளை என்பவற்றின் அபிவிருத்தி மற்றும் அமுலாக்கல் என்பவற்றை மேற்கொள்ளுதல்.

ஆக்கககூறு 3 - **இயலளவு கட்டியெழுப்புதல்.**

திட்டமிடல், பாதீடிடல், நிதி முகாமைத்துவம், கொள்வனவு மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம் ஆகிய பகுதிகளில் உள்ளூராட்சிச் சபைகளின் இயலளவைக் விரிவுபடுத்தல் மற்றும் கணக்காய்வுகளை வினைத்திறனுடனும் நேரகால அடிப்படையிலும் பொறுப்பேற்றல், செயற்திட்ட அமுலாக்கல் கூறுகளின் திறமையைப் பலப்படுத்தல், என்பன

ஆக்கககூறு 4 - **மதிப்பிடல் மற்றும் மதிப்பாய்வு**

உள்ளூராட்சிச் சபைகளின் நடவடிக்கைகளைக் கண்கானிப்பதற்கான முழுமையான முறைமைகளை நிறுவுதல். மற்றும் உள்ளூராட்சி சபைகளின் தொழிற்பாடுகள் பற்றி மதிப்பாய்வுகள் மற்றும் பகுப்பாய்வுகளை மேற்கொள்ளுதல்.

கூறு 5 - **செயற்த்திட்ட முகாமைத்துவம்**

செயற்திட்ட முகாமைத்துவக் கூறுகளின் இயலளவைப் பலப்படுத்தல்.

## 1.4 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான

கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை அப்பரிசோதனை உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்றும் நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக

ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டு இருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துங்களுக்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான விசேட (டொலர்) கணக்கிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்பல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தன என்றும்

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக் கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்ட செலவினம் ரூபா 2,697,298,747 ஆக இருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 6,313,681,328 தொகையாக இருந்தது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான செயற்திட்டச் செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பு கீழே தரப்படுகின்றது.

| **செலவின விடயம்** | **திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம** | | **2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம்** |
|---|---|---|---|
| | **2013 ரூபா** | **2012 ரூபா** | **ரூபா** |
| **ஆக்கக்கூறு** 1 | | | |
| உள்ளுராட்சி சபைகளிற்கு விடுவிக்கப்பட்ட மொத்த மானியம் | 2,074,525,021 | 1,179,150,104 | 5,512,060,021 |
| **ஆக்கக்கூறு** 2 | | | |
| நிறுவனமய கணக்குப் பொறுப்பு | 4,517,954 | 2,662,087 | 8,390,647 |
| **ஆக்கக்கூறு** 3 | | | |
| இயலளவை கட்டியெழுப்புதல் | 568,937,604 | 55,642,229 | 644,778,760 |
| **ஆக்கக்கூறு** 4 | | | |
| மதிப்பீடு மற்றும் மதிப்பாய்வு | 1,081,770 | 4,806,481 | 7,628,064 |
| **ஆக்கக்கூறு** 5 | | | |
| செயற்திட்ட முகாமைத்துவம் | 48,236,398 | 55,425,611 | 140,823,836 |
| | 2,697,298,747 | 1,297,686,512 | 6,313,681,328 |

## 4.2 விசேட (டொலர்) கணக்கு

தரப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தகவல்களின் படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான விசேட (டொலர்) கணக்கின் செயற்பாடுகள் மற்றும் அத்திகதியில் உள்ளவாறான அதிலுள்ள மீதி என்பன கீழே பொழிப்பாகத் தரப்பட்டுள்ளன.

| | ஐ.அ.டொலர் | ரூபா |
|---|---|---|
| 2013 சனவரி 01 இல் ஆரம்ப மீதி | 14,280,646 | 1,815,938,425 |
| கூட்டு :- மீள் நிரம்பல்கள் | 4,085,080 | 535,767,203 |
| மீள்மதிப்பு இலாபம் | - | 43,828,933 |
| | 18,365,726 | 2,395,534,561 |
| கழி :- பற்றுதல்கள் | 14,689,406 | 1,914,844,624 |
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 3,676,320 | 480,689,937 |

## 5. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) மீளாய்வாண்டின் போது கணக்கிடப்பட்ட ரூபா 43.83 மில்லியன் தொகையான வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் நிதிக் கூற்றுக்களில் புறம்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்ளூராட்சி அதிகாரசபைகளிற்கு விடுவிக்கப்பட்ட மானியங்கள் மீளாய்வாண்டின் போது உரிய அதிகாரசபைகளால் முழுவதும் பயன்படுத்தப்பட்டிருக்காத போதிலும், உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காக விடுவிக்கப்பட்ட ரூபா 27.88 மில்லியன் தொகையான அத்தகைய மானியங்கள் நிதிக் கூற்றுக்களில் செலவினமாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

## 5.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள்

பின்வரும் இணங்காமைச் சந்தரப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதியளிப்பு உடன்படிக்கையின் 2 ஆம் பட்டோலையின் 1பீ 4 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறு செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட வேண்டிய கணக்கீட்டுக் காலத்திற்கான ஆண்டுப் பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் XV ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் ஒரு மாதத்திற்கு ரூபா 50,000 ஐ விஞ்சி உத்தியோகத்தர்களிற்குச் செலுத்தப்பட்ட சம்பளங்கள் மற்றும் படிகளில் கழிக்கப்பட வேண்டிய உழைக்கும் போது செலுத்தும் வரி கழிக்கப்பட்டு, கிழக்கு மாகாண செயற்திட்ட அலுவலகத்தால் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

(இ) 2002 செப்தெம்பர் 30 ஆந் திகதிய 364(3) ஆம் இலக்க அரச நிதிச் சற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது ரூபா 512.49 மில்லியன் காசில் கொள்வனவு செய்யப்பட்ட சிவில் வேலைகள் மற்றும் பொருட்கள் தொடர்பில் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு பெறுமதி சேர் வரியின் விபரங்கள் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 6.1 நிதிகளின் பயன்பாடு

வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு கூறுகளின் கீழ் நிதிகளின் ஒதுக்கீடு, அரசாங்கத்தின் வருடாந்த பாதீட்டில் செய்யப்பட்ட ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிகளின் பயன்பாடு என்பவற்றின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| மூலம் | செயற்திட்ட உடன்படிக கையில் ஒதுக்கப்பட்ட தொகை | | 2013 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டில் செய்யப்பட்ட ஏற்பாடு | மீளாய்வாண்டின் போது உள்ளபடியான செலவினம் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்திய நிதிகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | யூ.எஸ். டொலர் மில். | ரூபா. மில் | ரூபா. மில் | யூ.எஸ். டொலர் மில். | ரூபா. மில் | யூ.எஸ். டொலர் மில். | ரூபா. மில் |
| ஐடிஏ | 50 | 5,500 | 1,960 | 17.7 | 1,953.63 | 41.62 | 4,578.48 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இலங்கை அரசாங்கம் | 34 | 3,740 | 490 | 4.4 | 484.94 | 13.42 | 1,476.46 |
| நலனாளிகள் | 02 | 220 | - | 0.91 | 100.49 | 1.92 | 211.53 |
| மொத்தம் | 86 | 9,460 | 2,450 | 23.01 | 2,539.06 | 56.96 | 6,266.47 |

மேலும் பின்வரும் அவதானிப்புக்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) குறித்த செயற்திட்ட காலத்திற்குள் செயற்திட்ட நோக்கங்கள் எய்தலை உறுதிப்படுத்துவதற்காக முழுச் செயற்திட்டக் காலத்தினையும் உள்ளடக்கியதாக மாதாந்த, காலாண்டு மற்றும் அரையாண்டு ரீதியில் நிதி மற்றும் பௌதீகரீதியான இலக்குகளுடன் செயற்திட்ட கூறுகள் மற்றும் நிதி ஒதுக்கீடுகள் மேவி முழுமையான விபரமான நடவடிக்கைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், அத்தகைய திட்டமொன்று தயாரிக்கப்பட்டடு அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) செயற்திட்ட பிரேரணையின்படி, செயற்திட்டத்திற்கான ஐந்து நடவடிக்கைகளிற்காக ரூபா 2,846 மில்லியன் தொகை பாதீடப்பட்டிருந்த போதிலும், மூன்று ஆண்டு காலத்தின் போது ரூபா 2,696 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. செயற்திட்ட காலம் 65 சதவீதம் கடந்திருந்த போதிலும், செயற்திட்ட காலத்திற்கான பாதீட்டு ஒதுக்கீட்டில் 5 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்படாது இருந்தது.

(iii) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 27.88 மில்லியன் கூட்டுமொத்தத் தொகையான கட்டுநிதி மீதி மீளாய்வாண்டின் போது குறிப்பிட்ட நோக்கங்களிற்கு பயன்படுத்தாமல் வட மாகாண உள்ளூராட்சி அதிகாரசபைகளால் வைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அத்தகைய கட்டுநிதி மீதிகள் செயற்திட்ட செலவாக கருதப்பட்டிருந்ததுடன் ஆகவே மீளாய்வாண்டின் போது செயற்திட்ட கிரயம் அதிகரித்துக்கட்டப்பட்டிருந்தது.

(iv) மேலும், மீளாய்வாண்டின் போது ரூபா 190.10 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டு உள்ளூராட்சி அதிகாரசபைகள் மற்றும் உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்திற்கு கையளிக்கப்பட்ட நிருமாண உபகரணங்களின் வினைத்திறனான பயன்பாட்டை நிரூபிப்பதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

(v) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டு கிழக்கு மாகாண உள்ளூராட்சி அதிகாரசபைகளிற்கு கையளிக்கப்பட்டிருந்த ரூபா 3.32 மில்லியன்

பெறுமதியான கணனி மென்பொருள் குறித்த நோக்கங்களிற்காக எந்தவொரு உள்ளூராட்சி அலுவலகங்களாலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. ஆதலால், அவற்றின் மீது ஏற்பட்ட கிரயம் பயனற்றது என்பதைக் காட்டுகின்றது.

## 6.2 பௌதீக செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வேறுபட்ட துறைகளின் கீழான செயற்திட்டத்தின் பௌதீக மற்றும் நிதிச் செயலாற்றல் கீழே தரப்படுகின்றன.

| துறைகள் | பௌதீக | | | நிதி | | |
|---|---|---|---|---|---|---|
| | 2013 ஆம் ஆண்டிற்கான இலக்கு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முன்னேற்றம் | பூர்த்தியாக்கலின் சதவீதம் | 2013 ஆம் ஆண்டிற்கான இலக்கு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவினம் | முன்னேற்றம் |
| | கிமீ/எண் | கிமீ/எண் | | ரூபா மில் | ரூபா மில் | |
| நுழைவு வீதிகள் | 643.724 | 503.838 | 78% | 6,221.386 | 4,086.722 | 65.7% |
| சந்தைகள், பூங்காக்கள் மற்றும் சிறு நகரங்கள் | 172 | 74 | 43% | 2,134.748 | 810.931 | 38% |
| சாக்கடை/ வடிகாலமைப்பு | 38.454 | 32.664 | 85% | 514.049 | 338.859 | 65.9% |
| கழிவு அகற்றல் முறைமை | 1 | 1 | 100% | 3.019 | 1.449 | 48% |
| கிராமிய நீர் வழங்கல் திட்டங்கள் | 7 | 5 | 71% | 95.870 | 19.745 | 21% |
| கிராமிய மின்னூட்டல் | 21.3 | 16.3 | 77% | 28.186 | 16.189 | 57% |

மேற்குறிப்பிட்ட அட்டவணையின்படி, சந்தைகள், பூங்காக்கள் மற்றும் நகரமயப்படுத்தல் மீதான அபிவிருத்தி நடவடிக்கைகள் இலக்கினைவிட பின்தங்கிய முன்னேற்றத்தை அறிக்கையிட்டிருந்தது. பல கட்டிடங்கள், வீதி நிர்மாண வேலைத்தளங்கள் மற்றும் அவற்றிக் மீது மீது மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனைகளில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் கீழே குறிப்பிடப்பட்டவாறு பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

(அ) கிளிநொச்சியில் மீன் சந்தை, மன்னாரில் சிறுவர் பூங்கா மற்றும் ஒட்டிசுட்டானில் கொல்களம் போன்ற நோக்கங்களிற்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்கள் குறித்த நோக்கங்களிற்காக பயன்படுத்தாமல் ஆறு மாதங்கள் முதல் பதினெட்டு மாதங்களாக பயன்றிருந்தன.

(ஆ) செயற்திட்ட பணிப்பாளரின் அங்கீகாரம் இல்லாமல் வடிகாலமைப்பு நிர்மாணத்திற்காக பயன்படுத்தப்பட்ட 5,540 கிகி வீஓஆர் இரும்பு சட்டங்கள் வழங்கலிற்கான முரண் கட்டளையாக பைறந்துறைசேனையில் வடிகாலமைப்பொன்றின் மேற்பரப்பு கெங்றீற் இடுவதற்காக ஒப்பந்தகாரருக்கு ரூபா 1.06 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) காத்தான்குடி நகர சபைக்கான மூன்று மாடிக் கட்டிடத்தின் நிர்மாணத்திற்காக ரூபா 30.80 மில்லியன் கிரயத்தில் வழங்கப்பட்ட ஒப்பந்தத்தின் கேள்வி கோரல் செயன்முறைகளை கொள்வனவு குழுவின் கூட்ட குறிப்புக்கள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் கேள்வி மதிப்பீட்டு தாள்கள் போன்ற அத்தகைய ஆவணச்சான்றுகள் கிடைக்காமை காரணமாக திருப்திகரமாக மதிப்பாய்வு செய்ய முடியவில்லை. மேலும், மண்முனைபற்று பிரதேச சபை அலுவலக கட்டிட நிர்மாணத்திற்காக ரூபா 1,403,750 இல் வழங்கப்பட்ட ஒப்பந்தத்திற்காக பிரயோகிக்கப்பட்ட கேள்வி மதிப்பீட்டு செயன்முறை தெரிவுசெய்யப்பட்ட கேள்வியாளரால் கோரப்பட்ட கேள்வி விலைகளின் பின்னர் திருத்தம் செய்யப்படாமை சந்தேகத்திற்கிடமாகவுள்ளது.

(ஈ) நேய்பூல் தோட்டத்தில் மேற்பரப்பு கொங்றீட் இடுவதற்கான ஒப்பந்தம் மற்றும் சாருக்கையில் பாடசாலை வீதியில் மேற்பரப்பு கொங்றீட் இடுவதற்காக ஒப்பந்தம் என்பவற்றின் கீழான வேலைகள் தொடங்கப்பட்டிருக்காததுடன் ஒப்பந்த உடன்படிக்கைகள் 2012 மே மாதத்தில் முடிவுறுத்தப்பட்டிருந்தது. உரிய செல்லுபடியான பிணைமுறி காலம் காலாவதியாகியிருந்தமையால் முறையே ரூபா 2.37 மில்லியன் மற்றும் ரூபா 1.37 மில்லியன் தொகையான தொழிலாம்பிப்பு முற்பணங்கள் அறவிடப்பட முடியாதிருந்தன.

(உ) 107.18 கி.மீற்றர்கள் வீதி வேலைகளின் புனரமைப்பு மற்றும் கட்டிடங்கள் என்பவற்றை பருத்தித்துறை நகரசபை மற்றும் ஊற்காவற்றுறை, காரைநகர், நல்லூர், வடமராட்சி தென் மேற்கு, நானாட்டான், மன்னார், மாந்தை மேற்கு, முசலி, துணுக்காய், கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, கரைச்சி, மற்றும் பூநகரி பிரதேச சபைகளால் நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

அந்த ஒப்பந்த வேலைகளில் அவதானிக்கப்பட்ட பொதுவான நலிவுகள் கீழே தரப்படுகின்றன.

- பல வீதி வேலைகளிற்காக 100 மிமீ மற்றும் 20 மிமீ அளவு கற்கள் முழுமையாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.
- விளிம்புகள் நிரப்பப்படுதல் உறுதியற்று அமுக்கத்தில் செய்யப்பட்டன.
- நிர்மாணிக்கப்பட்ட வீதிகளின் அகலம் அளவிடப்பட்டவற்றைவிட குறைவாக இருந்தன.
- சில் வேலைகள் 2006 இன் கொள்வனவு வழிகாட்டலின் 3.9.1 ஆம் பிரிவிற்கு முரணாக சனசமூக நிலையங்களிற்கு வழங்கப்பட்டிருந்தன.
- வீதி வேலைகளிற்காக மட்டமிடல் கருவிகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.
- சில பிரதேச சபை வீதிகளின் பகுதிகள் பாதகமாக சேதமடைந்திருந்தன.
- சில வீதிகளில் ஒப்பந்தகாரரால் தரப் பரீட்சிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை.
- மதகுகளின் விளிம்பு நிரப்புதல் வேலைகள் முறைப்படி செய்யப்பட்டிருக்கவில்லை
- எதிர்பார்க்கபடப்பட பெறுமதிக்கு பொதுமக்கள் பங்களிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை.
- சில கொங்றீட் வீதிகளிற்கு தண்ணீர் ஊற்றப்பட்டிருக்கவில்லை.
- சில கட்டிடங்களில் வெடிப்புகள் அவதானிக்கப்பட்டன.
- தார் முறைப்படி கலக்கப்பட்டிருக்கவில்லை.
- பல வீதிகளிற்கு செயற்திட்டத்தின் பெயர் பலகை பொருத்தப்பட்டிருக்கவில்லை.
- சில ஒப்பந்த வேலைகள் நிர்மாணம் பூர்த்தியாக்காமல் முடிவுறுத்தப்பட்டிருந்தது.
- வீதிகளின் கால்வாய்கள் முறைப்படி கட்டப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நிதி முகாமைத்துவம், கொள்வனவு மற்றும் ஒப்பந்த நிர்வாக நோக்கங்களில் உள்ளக கணக்காய்விற்காக ஆலோசனை சேவைக்கான ஒப்பந்தம் தனியார் துறையிலுள்ள கணக்காய்வு நிறுவனமொன்றுடன் ரூபா 4.63 மில்லியன் பெறுமதியான உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் அதில், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1.09 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், உள்ளூராட்சி அதிகாரசபைகளின் நிதிக் கணக்காய்விற்கான ஏற்பாடு ஒப்பந்த உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், நியதி நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்ட வேலைகளின் நோக்கெல்லையில் உள்ளடக்கப்பட்டிருந்த 31 விடயங்களில், 13 விடயங்கள் ஆலோசனையாளரால்

மேவப்பட்டிருக்கவில்லை. மேலும், வேலைகளில் சிலவற்றின் நோக்கெல்லை முழுமையாக மேவப்பட்டிருக்கவில்லை என்று அவதானிக்கப்பட்டது. நிதி முகாமைத்துவ கணக்காய்வு, கொள்வனவு கணக்காய்வு மற்றும் தொழில்நுட்ப கணக்காய்வு என்பவற்றின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளை அல்லது அவற்றின் மீதான தொழில்ரீதியான அபிப்பிராயத்தை உள்ளடக்கிய புறம்பான அறிக்கைகளோ சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.3 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிழக்கு மாகாணத்தில் தேசத்தின் மகுடத்திற்கான அலுவலக கட்டிடத்தின் நிர்மாணத்திற்காக செயற்திட்டத்தால் ரூபா 237 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அத்தகைய நிர்மாண வேலைகள் உள்ளூராட்சி உட்கட்டமைப்பு முன்னேற்ற செயற்திட்டம் (எல்ஜீஐஜபி) என அழைக்கப்படும் இன்னொரு வெளிநாட்டு நிதியிடப்பட்ட செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

(ஆ) ரூபா 12.3 மில்லியன் கூட்டுமொத்தத் தொகையான வற் கொடுப்பனவுகள் மீளாய்வாண்டிற்கான வற் பதிவின் செல்லுபடியாகும் தன்மையை மெய்மையாய்வு செய்யாமல் வட மாகாணத்தில் சிவில் வேலைகளில் ஈடுபடுத்தப்பட்ட ஒப்பந்தகாரர்களிற்கு 16 சந்தர்பங்களில் ஒரு நகர சபை மற்றும் ஏழு பிரதேச சபைகளால் செய்யப்பட்டிருந்தன என அவதானிக்கப்பட்டது. மேலும், ரூபா 3.924 மில்லியன் கூட்டுமொத்தத் தொகையான வற் கொடுப்பனவுகள் வற் பதிவு இலக்கங்களை சமர்ப்பத்திருக்காத ஒப்பந்தகாரர்களிற்கு 03 சந்தர்ப்பங்ளில் 02 பிரதேச சபைகளால் செய்யப்பட்டிருந்தன என்று கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) ஒப்பந்த நிருவாகம்
(இ) நிதி முகாமைத்துவம்